மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்த பாடசாலை

# தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல்

**பாடம்: ICT**

**அலகு** : 01

**தரம்: 10**

**Prepared by-** M.N.M. NILMI
(SRI KATHIRESHAN TMV,DERANIYAGALA)

**தேர்ச்சி :** **தகவல் உலகில் கணிணியின் இடத்தை கண்டறிவார்**

**தேர்ச்சி மட்டம் :** **1.1 தேசிய அபிவிருத்திக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தின் பங்களிப்பினை கண்டறிவார்**

**தரம் 10 ICT பாடப்புத்தகத்தில் பக்கம் 16-26 ஐ வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

**பயிற்சி 01**

1. கீழ்வரும் செயற்பபாடுகளை மேற்கொள்ளும் மருத்துவ சாதனங்களை பெயரிடுக.
   - **A.** மூளையின் தொழிற்பாட்டை பதிவு செய்தல்
   - **B.** காந்த அலைகள் மூலம் உடலின் உட்பகுதிகளின் ஒளிப்படங்களை எடுத்தல்
   - **C.** இதயத்தின் பல்வேறுபட்ட தொற்றுக்களை இனங்காட்டல்
   - **D.** உடலின் உட்பகுதிகளை வேறுவேறாக முப்பரிமாணத்தில் படமெடுத்தல்
   - **E.** இதயதுடிப்பை அவதானித்தல்
   - **F.** குருதி சீனியின் அளவை பரிசோதித்தல்

2. தொலைமருத்துவம் என்றால் என்ன?
3. தொலை மருத்துவத்தின் நன்மைகள் 3 தருக.
4. விவசாயத்தில் பின்வரும் சாதனங்கள் உதவும் முறையை/ முறைகளை எழுதுக.
   - **A.** வானிலை அளவீட்டு கருவி
   - **B.** தன்னியகக்க வண்டு கட்டுப்பாட்டு பொறி
   - **C.** சொட்டுமுறை நீர் வழங்கல்
   - **D.** தன்னியக்க களையகற்றும் பொறி
   - **E.** ரோபோ

5. விலங்கு பண்ணைகளில் தன்னியக்கமாக விலங்குகளை கண்கிட பயன்படும் உபகரத்தின் பெயரை குறிப்பிடுக
6. விலங்குப்பண்ணை, விவசாய நிலம், போக்குவரத்து போன்றவற்றில் CCTV கமெராக்கள் பாதுகாப்பிற்காக பயன்படும் விதத்தை குறிப்பிடுக.
7. கைத்தொழிற்சாலைகளில் ரோபோ தொழினுட்பத்தை பயன்படுத்துவதால் உள்ள நன்மைகள் 4 இனை குறிப்பிடுக.

8. காணொளி மாநாடு (Video Conference) அல்லது வீடியோ உரையாடல்களை நடாத்த பயன்படுத்த கூடிய மென்பொருட்கள் 2 இனை குறிப்பிடுக.
9. காணொளி மாநாடு (Video Conference) இன் நன்மைகள் 2 குறிப்பிடுக
10. தொழிற்சாலை, திணைக்களங்களில் தொழிலாளர் வரவை தன்னியக்கமாக பதியும் உபகரணங்கள் 2 இனை குறிப்பிடுக.

    **A.** இவ் உபகரணங்களால் எவ்விதமான தகவல்கள் பெறப்படுகின்றன.

    **B.** இவ் உபகரணங்களை வரவுகளை பதிய பாவிப்பதன் அனுகூலங்களை குறிப்பிடுக.